ஸ்ரீ:

ஸ்ரீ மதேராமாநுஜாய நம:

வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும்
வெளிவரும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.

தொகுதி 2 } வெகுதானிய ஹு சித்திரை மீ } பகுதி 4.
Vol. 2 } MAY 1938. } No. 4.

உள்ளுறை.

1.	கருமத்திகிரி.	பத்திராசிரியர்.	49
2.	கிளைச்சங்கத்திறப்பு விழா.	ப. ரெ. திருமலை ஐயங்கார்.	58
3.	கம்பர் திருநாட்கொண்டாட்டம்.	முன்தொடர்ச்சி.	65

...ர்:—
...கேசவய்யங்கார். M. A. B. L., அட்வகேட்.
...ரூ. ஒன்று] [தனிப்பிரதி அணா ஒன்றரை

208490

சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரொம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம் நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந் தெடுத்த கட்டியான வெண்ணெயும் நறுமணத்த புத்துருக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வமுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்ட வரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய் யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடை யில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக் காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊரும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

வகுளமாலை.

தொகுதி 2.	வெகுதானிய வருஷம் சித்திரைமீ	பகுதி 4.
Vol 2.	MAY 1938.	No. 4.

தருமத்திகிரி.

உச்சி தனிற் கொண்டுடனே உச்சிப் பகற்கடனை
உச்சிச் சமயத்தும் உடையவரே—அச்சமுடன்
ஆதித் தனித் திருமாற் காமெனத்தாமூரி நிமிர்ந்
தோதிக் கொடுத்தார் புனல். 1.

ஆரண மீதுறை காரறமூர்த்தி
தாரணியோர் பருகூருணிதானும்
சீரணி பேரற மேறிய சீமான்
வீரணியேரடி சேரெதிராசன். 2.

துன்னு திருமின்னுமொரு பொன்னுருவ மென்னும்
தன்னுருவ முன்னியுலகுய்யவருமய்யன்
தன்னவர் மனங்கவருநங் நரமடங்கல்
தன்னுடலனைத் துலகுமென் றுடன்தரித்தான். 3.

என்னவிது மூதுவர்களோது மறமென்னத்
தன்னடை தடைப்படு மிடத்தடி யிடித்தே
கன்னலென வன்னநெறி நின்றவர்கள் கண்ணை
மென்னடைமிழற்றி மழைபெய்யு மொரு மெய்யன். 4.

வேத வழியாது மழியாது விழியாகும்
யாதுமறியாது திரியாங்கை யெனுமாந்தர்
கோதுகுல மீதுலக மோலமிடு கோலம்
கீதை யுழலாழிகெழு கேசவன் கிழித்தான். 5.

குடியே கெடவாணை கடந்தவர்பால்
அடியே யிடியாம் படிகண்டடியோர்
முடிமேலற நற்கரமே குவியும்
படியா யடியோர் படியுங் கடவார். 6.

காணக்கரத்தே கருத்தாகுமாழி
பூணப்பெறும் வீறுபூக்கும் புயக்கோல்
தூணப்ப னெப்பாதவாறே துடிப்பார்
வீணே யரங்கின்றி வட்டாட நிற்பார். 7.

எம்மாமறைச் சிங்கர் செந்நா முழங்கும்
இம்மாணறங்காண வொண்ணாத வீணர்
தம்முள் ளழுக்காறு தானுள்ளதென்றே
விம்மிப் படங்கொண்டு வியத்தடிப்பார். 8.

பிச்சைப்புகக்கற்ற விச்சைச்சிறைப்பட்
டச்சம்விடுத்தச்சுதன் பாலடங்கா
தெச்சத்து நின்றெஞ்சி யெச்சிற் பொறுக்கும்
நச்சுர்க்கறச் செவவி நச்சாகு மன்றே. 9.

தம்மனம் போகுமாறே கருமமென் றுருகுவாரும்
தம்மடிதாவுமாறே தவநெறியென் றார்வாரும்
தம்முடம்ப ணையுமாறே அன்பென வியம்புவாரும்
மும்மறையிறைவன் செங்கோல்மாட்சிமைமறுத்தாராவார். 10

தம்மையே கடவுளாக்கும் களவதோ தருமமாகும்
விம்மியே வீங்கிவீழும்விரைவதோ விதியதாகும்
தம்மிசைப்புகழே பேசிச்சலமிலார்கண்ணே எசும்
இம்முறைதானோ இன்பம் விழுமியர் கொழிக்குமாறு 11.

நம்முளானுளனேலண்ணலாணையுமுளதேயாகும்
நம்மெலாமிக்கவம்மான் தண்டமே கண்டுகன்மச்
செம்மையேதேறியென்றும் செய்வன அவ்வாற்றானே
எம்மனோரெண்ணி நின்ற எண்ணரு நெறியேசேர்மின். 12.

ஆவியாயடியார்க்கெல்லாம் அருளியேமறையாயன்றன்
தாவிலே கொள்ளத்தன்பாலாகுநல்லறமாயேவும்
காவலே கடந்து தோற்றம்போற்றுவார் காமமாற்ற
ஓவியப் பாவை தேடியோடுவார்க்குவமையாவார். 13.

சமணர் சாக்கியர் யவநராம்பிறர்
தமருமேயுறும் தகவுதாங்கறம்
கமலையோடமர் கருணை மேனியன்
நிமல நன்னிறம் திகழநின்றதே. 14.

அட்டகரனட்டதொரு கட்டளையிதென்றே
சிட்டரிதையெட்டியுலகிட்டுயர்வர்மற்றோர்
பட்டகடுகட்ட கதைதட்டுமொழிகேட்டே
கிட்டுமினுநட்டுமறநிட்டனடிமாட்டே. 15.

பிறப்பாலும் பிறப்புக்குத் தக்க ஒழுக்கத்தாலும் வரையறுக்கப்பட்டு விரிந்துள்ளதே ப்ரபஞ்சம்என்றும், ப்ரபஞ்சத்தைத்தாங்குவது அத்தகையதோர் தருமம்என்றும், அஃதே பரன்நடாத்தும் கோல் என்றும் அக்கோற்கண் நிலைநின்று நிகழுமதே உலகம் என்றும், முற்பகுதிகளில் விரிக்கப்பட்டன. ஈதேபரன் உருட்டும் திகிரி. பரன்ப்ரவர்த்தித்துள்ள இச்சக்கரமே தருமம். 'சக்கரம்' என்ற சொல்லுக்கு, தொழிற்பாகுபாட்டால் வரையறுக்கப்பட்டுள்ளது என்றது பொருளாகும். ஈதே பரன் உலகத்தை நிகழச் செய்யும் நெறி. இந்நெறியே சக்கரநெறி. இந்நெறிக்கண்ணே உலகம் நிறுத்தப்பட்டுள்ளது. "சக்கரநெறிநில்" என்ற மூதுரை இப்பொருளையே உட்கொண்டுள்ளது. இச்சக்கரத்தை ப்ரவர்த்திப்பவனே பரன். இதை அநுவர்த்திப்பதே உலகு. "ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் நாநுவர்த்தயதீஹய:" என்று பரன்தானே

இக்கருத்தைக் கீதையில் குறிக்கொண்டான் ஆதலின் பரனே சக்ரவர்த்தி. பிறர் அவனது குடி. சக்கரம் உருட்டும் நெறியே பரனுடைய உலகாட்சி. இவ்வாட்சியே பரன் தனதடியார்கட்கு அருளும் காட்சி. பரனது சக்கரநெறி காப்பாரே பரனது குடிக ளாவார். அவர்களே பரனுடைய அடியார்கள். அவ்வடிமையே அவர்களது குடிமை. இங்நெறிக்கண் ஊன்றி ஆட்படுவார்களே குடிகுடியாட் செய்பவர்களாவார். வகுக்கப்பட்டுள்ள தத்தம்குடிக் கேற்ற கருமங்களை முயல்வதே குடிசெயல்வகையாகும். இவ்வகை யொன்றே இன்பம்பயக்கும் என்று திகிரியோன்தானே அருளிச் செய்தான். ஈதே இறைவனது ஆட்சிநெறி. இறைவனென்பான் தானிருந்துழி இருந்தே அறமாகும் தனதாழியின் உருட்டாலே தன்னுலகம் முழுதுமே நடப்பச்செய்யும் இயல்வினனாவான். ஈதொ ன்றே இறைவனது உலகு காக்குமியல்வு. இவ்வியல்வினனே இறை வனாவான். இங்நெறியினின்றும் உலகம் வழுவும் காலந்தோறும் அவ் விறைவன் தானே உலகத்தில் அவதரித்து, தனதாழியைத் தானே உருட்டிக்காட்டி, இங்நெறியை நிலைநாட்டி, உலகத்தை அதன் கண் ணே நிலைநிறுத்திக்காக்கிறான். இத்தகைத் திகிரியோனே உலகுக் கெல்லாம் ஆதியாவான். அவனே உலகத்துக்கெல்லாம் உற்றஓர் தனிஇறை. பரன்ஓச்சும் கோல்நெறிகண்டே மண்ணுலகில் அதற் கேற்ப மன்னவர்கோலும் நடாத்தற் பாலதாயிற்று. இம்முறையால் மன்னவர்களும்சக்கரவர்த்திகளாயினர். "நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:" என்றது அறநூல். திகிரியோன் அம்சர்களே அரசராவார் என் றது அதன் பொருள். பரனுடைய செங்கோல்நெறியை உலகத் தில் நிலைநாட்டற்பொருட்டே வேந்தர்கள் ஆட்சிபுரிவது. திகிரி யோன் செங்கோன்மையைச் செவ்வனே கண்டு அன்னவனடிக்கீழ் உலகமர்ந்து ஆட்படுமாறு கோல் நடாத்துபவர்களே அறவேந்தரா வார். மற்றவர் ஆகார். மறைகளாலும் இருடிகளாலும் விளக்கப் பட்ட இவ்வுண்மையை மாக்கவிஞர்களும் இலக்கணநூலாரும் நன்கு பேணிப் போந்துள்ளார்கள். "ந்ருபஸ்யவர்ணாச்ரமபாலநம் யத்ஸ ஏவதர்மோ மநுநாப்ரணீத:" என்றும், இங்நெறிகாக்கும் தாளாண்மையுடையனே பரன்என்றதை "தர்மஸம்ரக்ஷணார்த் தைவ ப்ரவ்ருத்தி: புவிசார்ங்கிண:" என்றும் காளிதாஸர் ஆர்வத் தால் பாடியுள்ளார், அறவேந்தர் திகிரியுருட்டும் பான்மையை "நவ்ய தீயு: ப்ரஜாஸ்தஸ்யநியந்து: நேமிவ்ருத்தய:" என்று அன்ன

வர் நன்கு விளக்கினார். இக்கருத்தைப்பின்னும் பன்மடங்கு அழகு படக் கம்ப நாட்டாழ்வார் தமதிராமாயணத்தில் விரித்துள்ளார். நிவந்த வேதியர்களைக்காக்கவும், அவர்களுக்கு இடுக்கண் செய்யும் தீயவர்களை மாய்க்கவுமே தமது தோள் அம்புகளைச்சுமப்பதென்று அன்னவன் தெய்வச்சிலை அறங்காக்கும் பெருமையை மிகவும் கம்பீரமாய்ப்பாடியுள்ளார், "அரக்கரென்றுளர் சிலர் அறத்தின் நீங்கினார் நெருக்கவும் யாம் படர் நெறியலாநெறி துரக்கவும் அருந்த வத்துறையுணீங்கினோம்" என்று, அறத்தின் நீங்கினார் அரக்கத் தன்மையை விளக்கிப், பின்னர் அறனை நிலைநாட்டுதலே பரனது அவதாரப்பயன் என்றதை "அறந்தவாநெறி அந்தணர் தன்மையை மறந்த புல்லர் வலிதொலையேனெனின். இறந்துபோகினும் நன்றிது அல்லது பிறந்தியான்பெறும் பேறு என்பதியாவதோ" என்று பரன் வாயிலாகத்தாமே சிங்கவொலி செய்து, "ஆவுக்காயினும் அந்தணர்க்காயினும், யாவர்க்காயினும் எளியவர்க்காயினும் சாவப் பெற்றவரேதகை வானுறை தேவர்க்கும் தொழும் தேவர்களாகு வார்" என்று தருமவீரியத்தின் பெருமையை நிலைநாட்டி, "வாழூ மறை வாழி மநு நீதிபறம்வாழூம்.........எழுலகும் வாழூ மினி" என்று மங்கலம் பாடி முடித்தார். இந்நெறி காத்தலே மன்னவர் புரியும் ஆட்சி என்றதையும், ஈதே செங்கோன்மை என்றதையும் கம்பர் தாமே "முறையும் வாழ்மையும் முபனுநீதியும் அறையு மேன்மை யோடறனுமாதியாம் துறையும் யாவையும் சுருதி நூல் விடா இறைவரேவலால் இயைவ காண்டியால்" என்று நன்கு விளக்கியுள்ளார். இவ்வாறு தருமநெறி விளக்கியபடியால் இவரும் கவிச்சக்ரவர்த்தி ஆனார், கவிகளது தருமத்திகிரியை இவ்வாறு இவர் உருட்டியபடி "சான்றோர்கவியெனக்கிடந்த கோதாவரியினை வீரர்கண்டார்" என்று இக்கருத்தையே நன்குவிரித்தார். கல்வியை முளையாயும். கேள்வியைக் கவடுகளாயும் தவத்தை இலைகளாயும், அன்பை அரும்பாயும், தருமத்தை மலராயும், பேரின்பத்தைக் கனியாயும், வருணித்துள்ளார். தருமம் இல்லையேல் கல்வி நற்பயன் பயக்காது என்றது கருத்து. சான்றோர் பல்குவது கோல் செம் மையில் என்பர் செந்நாப்புலவராகிய கபிலர். "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்" என்பர் தெய் வப்புலமைத்திருவள்ளுவனார். வேத வழியையும், தருமநெறியையும் காக்கும் கடமையே மன்னவர்களுக்கு உண்டு, அழிக்கும் உரிமை

அறவே இல்லை, என்பதே நம்பெரியார் துணிபு. "வேந்தனும் அல்லவை செய்யான்" என்றதே துணிபு. செய்யுமுரிமை யுடையவன், ஆகினும் செய்யான், என்றது ஐயம். செய்யுமியல் வினன் என்றது திரிபு. ஈதே நல்லறவோர் மரபு. "வேந்தனும் வேந்து கெடும்"; "பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்" "தலையினிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையினிழிந்தக்கடை" என்ற திருக்குறள்களால், வகுக்கப்பட்ட பிறப்பொழுக்கத்தினின்றும், நிலையினின்றும், வழுப்பட்டார்க்கு உற்றது கேடு என்றது நன்கு புலப்படும். "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தலரிது" என்றதே அன்னவர் தேறிய திண்ணம், வகுத்தான் வகுத்த நெறியாதலால், மாந்தரனை வரும் இந்நெறிகாக்கும் கடப்பாடுடையரேயாவார். அடியார்கள் நன்கே காக்கும் கடமைப்பாடுடையராவார். பழவடியார் பின்னும் நன்கே காக்கும் இயல்வினராவார். இந்நெறி காக்கும் வலிமையின் மிகுதிக்குத்தக்கவாறே குடிமையும், அடிமையும், பழவடிமையும் பெறுவார். பழவடியார் என்றது கொண்டு சிறிதும் நெறிகடக்கக் கருதார். நெறிகடக்கும் கருத்து அடியார்க்குச் சிறிதும் உதிக்காது. தனதாணை கடந்தாரைப் பரன் கடியாது விடான், விட்டானாகில் அவனது ஆண்மை குன்றிவிடும் என்றது:இராமானுசமுநி திருப்பாடியம். பழவடியாராயினும் நெறி கடந்தாரைப் பரன்வேருடன் அறுப்பான்என்பர் வான்மீகி. "பழைய மெனக்கருதிப் பண்பல்லசெய்யும் கெழுதகைமைகேடு தரும்." என்றார் திருவள்ளுவனார். "அன்புமறனு முடைத்தாயி னில் வாழ்க்கை பண்பும் பயனுமது" என்ற திருக்குறளில், அன்பு டைமையைப் பண்பு என்றும், அறனுடைமையைப் பயனென்றும் குறித்துள்ளது உற்று நோக்கத்தக்கது. அன்பை அரும்பென்றும், அறனை மலரென்றும் கம்பர் உவமித்ததும் இங்கண் ஒப்பிடத்தக் கது. அடிகிடக்கும அடியார்க்கு அடிக்கடக்கும் கருத்து அறவே ஏலாதாதலின் அடியார் என்பார் பரனடிக் கடக்கவொண்ணாது அவனது திருவடிக்கண்ணே அமர்ந்து வேரூன்றி விடுவார்கள். அவ்வாறு அவனது திருவடிக்கீழ் நன்கமர்ந்து வேரூன்றியவர்களு க்குள் தலைசிறந்தவரே நம்மாழ்வார். "அடிக்கீழமர்ந்து புகுந்தே னே"; "தாள்களை எனக்கே தலைத்தலைச்சிறப்பத்தந்த கற்பகம்"; "அப்பொன் பெயரோன் தடநெஞ்சம் கீண்டபிரானார் தமதடிக்கீழ்

விடப்போய்த் திடநெஞ்சமாய் எம்மைநீத்து இன்று தாறும்திரிகி
ன்றதே'' என்று தருமத்தே வேரூன்றி நீத்தார்க்கெல்லாம் தலைவ
ராயினர். "அறமுயலாழியங்கை'' யையே இவர் ஸாக்ஷாத்கரித்
தார். ''பிறவித்துயரற............அறவனை ஆழிப்படையந்தணனை
மறவியையின்றி மனத்துவைப்பாரே''; "அறமுயலாழிப்படைய
வன்''; ''நிறமுடை நாற்றடந்தோள்......அறமுயலாழியங்கைக்கரு
மேனியம்மான்'' என்று ஆழ்வார் தருமத்திகிரியோனைக் கண்ணாரக்
கண்டு களித்தவாறு. அறவொளியே இவர்கண்டஒளி. அவ்
வொளியேகாக்கும்ஒளி. "ராமோவிக்ரஹவாந்தர்ம:" என்றார் வான்
மீகி. ''தர்மோரக்ஷதிரக்ஷித:'' என்றார் மநு. பிணி, பசி, மூப்பு,
இறப்புப்போன்ற பெருந்துன்பம் விளைந்தவிடத்தும், அடிக்கடத்
தல் என்றது பரனடியொன்றிய பெரும் புண்ணியரின் இயல்புக்கு
எய்தாமைபற்றி அவர்கள் அது செய்யாதே போரக்கடவர். ''பர
மாபத்கதஸ்யாபிதர்மேமமமதி: பவேத்'' என்றா வாம்பெற்ற-வீ
ஷணனையே ''விபீஷணஸ்துதர்மாத்மா'' என்று பரன்ஆட்கொண்டு
பின்னும் தனதாணையை நன்குகாக்குமாறே "மதாஞ்ஞாமநுபாலய"
என்று ஏவியருளினான். பொறியவித்த பெருந்தகையாளரே இந்
நெறிக்கண் நன்குநிலையுறுவார். ஒட்டை மனத்தர்க்கு இந்நெறி
யின் நீர்மையும், தூய்மையும், இனிமையும் உணரவொண்ணாது.
"ஆறுமைம்பொறி நின்னையும் ஆனெனக் கூறுமிவ்வுநத் தீண்டுதல்
கூடுமோ" என்றே அநுமன் தனக்கும் பிராட்டி தரும உபதேசம்
செய்தருளினாள். இவ்வறம் நன்கு காத்தவர்கட்கெல்லாம் நம்மாழ்
வாரே தலைவர். ஆதல்பற்றியே இவர் வைணவர்கட்குத் தலைவரா
யினர். ''சுருதியும், மிருதியும், என்னுடைய ஏவலே; அவைகளைக்
கடந்து நடப்பவர் என்னுடைய ஏவலைக்கடந்தவராவர்; அவர்கள்
எனக்குத்ரோஹம் செய்பவர்கள்; என்னிடத்தில் பக்தி இருந்தா
லும் அவர்கள் வைணவர்களல்லர்'' என்ற பரன்பாசுரத்தை இங்கு
நினைக. வருணநெறி காப்பாரே வைணவத்தலைவர் என்றது இரா
மாநுசமுனி திருவாக்கு. ஆழ்வார் இந்நெறிகாத்த பெருமையையும்,
மயர்வறமதி நலமருளப்பெற்ற நீர்மையையும் ''மயர்வறமதி நலமரு
ளினன்'' என்றிவர் (ஆழ்வார்) தாம்பெற்றது பக்தி ரூபாபந்நஞான
மாயிருந்தது; தாம் பெற்றதொன்றும், பிறர்க்குபதேசிப்பதொன்று
மாக வொண்ணாதே; அப்போது விப்ரலம்ப (வஞ்சனை) கோடியிலே
யாவரே............இதுதானே வேதாந்த விஹிதையான பக்தி

தானேயானாலோ வென்னில், ஸர்வேச்வரன் அருள இவர் பெற்றாராகிற ஏற்றம்போம், அபசூத்ராதிகரணந்யாயமும் ப்ரஸங்கிக்கும்'' என்று நம்பிள்ளை 'வீடுமின் முற்றவும்' ப்ரவேசத்தில் நன்குவிளக்கியருளியது நோக்கிக்கண்டுகொண்மின். ''அபசூத்ராதிகரணந்யாயமும் ப்ரஸங்கிக்கும்'' என்றநம்பிள்ளையின் வாக்கியம் நன்குநோக்கத்தக்கது. இக்கருத்தை நம்தேசிகனாரும், ஆழ்வார்களும் ஸ்வஜாதி நியதியைக்கடந்தார்களில்லை என்று விளக்கி அவர்களிடத்துத் தமதுஒப்பற்ற பத்திமையை வெளியிட்டுக்கொண்டார். இவ்வாறு எத்தகைப்பெரியாராலும் அநுவர்த்திக்கப்படும் பெருமை வாய்ந்ததே தருமமெனும் பரனதுநெறி. சொல்லும் பொருளும் இந்நெறிக்கண்ணே வரையறுக்கப்பட்டுள்ளன. பொருள்களுக்கு வருணமுண்டென்றது போல் சொற்களுக்கும் வருணம் உண்டென்றது முதற்பகுதியில் விளக்கப்பட்டது. இலக்கிய இலக்கணங்கள் நன்கோர்ந்தே இவ்வுண்மை தெளியற்பாலது. இலக்கியங்கொண்டு இது விளக்கப்பட்டுவந்தது. இலக்கணம் கண்டால் இதுபின்னும் நன்குவிளங்கும். தமிழிலக்கணம் இந்நெறியை நன்குடன்பட்டுள்ளது. வருணநெறிக்கு மகட்கோடலே அடியாய் நின்றது. மகளிரை "பிறன்பொருள்"; ''பிறனியலாள்''; 'பிறர்க்குரியாள்''; ''பிறன் வரையாள்'' என்று குறளாசிரியர் கூறுவர். இதுமகளிரை அஃறிணையாக்கியதொன்றன்று. கற்புடைமகளிர் கணவனாகியே அவன் பொருள்பட்டு உயர்திணைச்சுட்டாவான் என்றது இதயம். உரியளாகிய இவள் தவப்பயனாலேயே அவன் கணவனும், உயிர்த்தோழனும், அருங்குழவிபாயுமாவது. கணவன் தனக்கும் இவளே உயிராகும் மாட்சிமையை மறைதானே உச்சி மேற்கொண்டதென்றபோது கற்புடைமகளிர் பெருமாட்சியை என்னென்று பிறர்எடுத்துரைக்க வல்லராவர்? பரம்பொருளையும் இவ்வாறே மறைமுடிவிளக்கிப்போந்தது. கற்புடைமங்கையர் கணவனென்றே ஆடவர் பொருளாவது. ''நல்லோள் கணவன்'' என்றே பெரும்புலவர்பகாவர். அவன் வேறுபேரற்றே திகழ்வன். இவ்வாறு திகழும்நிலைக்கே உற்றது ''அறநிலை'' என்ற பெயர். ஈதே உலகு காக்கும்நிலை. பொருளையும் காமத்தையும், தருமமும் வீடுமாக்குவது இந்நிலையே. இந்நிலையின் நெறிகுலைந்தால், வேறு எந்நிலைபெறினும் அது ஈமத்தமர்நிலைபோல்வதொன்றேயாம். ஒழுக்கமும் ஆக்கமும் செழிப்பது இந்நிலை யொன்றில் தான். மகட்கோடலை

"மறைகளே வகுத்த கூட்டம்" என்பர் கம்பர். இவ்வகுப்புக்குப் பிறப்பே அடி, காமமும் அறத்தே நிலையுறல் வேண்டும். வருண நெறிக்கு முரண்பட்ட காமத்தை "பெருந்திணை" என்று பொருளிலக்கணம் கழிக்கும். பெருந்திணை என்றது பொருந்தாக்காமம். வருண வேறுபாடே பொருந்தாமை. இது தமிழிலக்கணம். வருணப்பாகுபாட்டைப் பொருளிலக்கணம் அடியாகக் கொண்டுள்ளது. யாப்பிலக்கணத்திலும் இப்பாகுபாட்டைக் காணலாம். பாக்கள்யாவுமே நால்வகைவருணத்தில் யாக்கப்பட்டுள்ளன என்றது யாப்பிலக்கணம், "நிலனுங்குலனு நிறனுமிராசியு, மாகிய விருமூன்றிலக்கணப்பகுதி, குறித்தார் முற்றுணர்குவரென்ப" என்றது சூத்திரம். வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என்ற நான்கிற்கும் ஆறிலக்கணப்பகுதியைப் புலவர் குறித்துள்ளார். அவற்றுள் வென்பா பிராமணகுலம், நிலம்முல்லை; அகவற்பாக்ஷத்திரியகுலம், நிலம் குறிஞ்சி; கலிப்பாவணிககுலம், நிலம் மருதம்; வஞ்சிப்பாவேளாளகுலம், நிலம் நெய்தல். அவ்வவ் வருணத்தாரைப்பாடும் பாக்களுக்கு எண்ணும் இலக்கணமும் வகுக்கப்பட்டுள்ளன. அவைநோக்கிக்காண்க.

ப்ரபஞ்சத்தில் காணப்படும் பொருள்களும் அவைகளை உணர்த்தும் சொற்களும் வருண நெறிக்கண்ணேயாக்கப் பட்டுள்ளன என்று இராமாநுச முனிவிளக்கிய உண்மை இதுகாறும் சிறிது விரிக்கப்பட்டு வந்தது. அந்நெறியே சக்கரநெறி. அந்நெறிக்கண் நிகழ்வதே ப்ரபஞ்சம். இனி, ப்ரபஞ்சத்தின் உண்மையும் தன்மையும், அதை உள்ளவாறு உணர்த்தும் சொல்லின் தூய்மையும் பெருமையும், விரிக்கப்படும்.

எவ்வகையு மிவ்வுலகி லெவ்வுயிரு முய்யச்
செவ்வியரறத் தொழு குமவ்விய நெறிக்கண்
எவ்விறையுமாக வருமோரிறையறத்தே
அவ்வுலகு மிவ்வுலகு மெவ்வுல குமம்மா.

பத்திராசிரியர்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

—:o:—

இராயப்பேட்டையில் கிளைச்சங்கத் திறப்புவிழா.

—:o:—

இராயப்பேட்டையிலுள்ள ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோயிலில் தாயார்ஸந்நிதி முன்பாக விசேஷமாக அலங்காரம் செய்யப்பட்டு, ரத்நகம்பளங்கள் விரிக்கப்பட்டு, ஆடவர் ஒருபால், பெண்கள் ஒருபால் வரிசையாக அமர்ந்திருக்க ஒரு மஹோத்ஸவக் கொண்டாட்டம் 17-3-38௳ வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகியது. அநேக தமிழன்பர் வந்திருந்தனர்.

கடவுள் வாழ்த்துக்குப்பின் குருச்சி ஸ்ரீநிவாஸவேதாந்தாசாரியார் அவைக்கு அக்ராஸனராக ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்களைப் பிரேரிக்கையில் கூறியதாவது:—

தமிழ்மிகவும் அநாதி. அக்காலத்தில் தமிழ்ச்சங்கங்கள் தமிழபிவிருத்தியைக் கவனித்துவந்தன. இக்காலத்தில் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம் இத்தொண்டினை நன்காற்றிவருவது அநேகமாக அனைவரும் அறிந்த விஷயமே. அங்குச்செய்த பயனேகிளை அதாகவே வளர்ந்து இப்பொழுது இங்கு தளிர் விடப்போகிறது. ஸ்ரீ பார்த்தசாரதி ஸந்நிதியில் ஐந்து எம்பெருமான்கள் எழுந்தருளியிருக்கின்றார்கள். இங்கு ஸ்ரீநிவாசன் திருமார்பினின்று அகலாதிருக்கும் பிராட்டி முன்பு இச் சபை கூடியிருப்பதே இக்கிளை விசேஷமாக அபிவிருத்தியாகும் என்பதைக் காட்டுகின்றது, எல்லாம் அம்மை அப்பர்களின் செயல். கோயிலுக்குள் நுழைவதற்குமுன் காலலம்பிக்கொண்டே பின்னர் பிரவேசிக்கிறோம். இச்செய்கையால் வெளிமலம் தொலைவதுடன் வெப்பந்தணிந்து மனக்குளிர்ச்சி உண்டாகிறது. அப்பன்ஸந்நிதியில் அனைவரும் அவன் மக்கள் என்ற உணர்ச்சி உண்டாக வேண்டும். ஆழ்வார்கள் தமிழை நன்கு வளர்த்தவர்கள். ஆத்மோஜ்ஜீவநமாக அரியவிஷயங்களைப் போதித்தவர்கள். 'ஏழை யேதலன்' என்ற பாட்டில், இராகவனின் ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களை எங்ஙனம் கொண்டாடுகிறார் பாருங்கள். ஸ்ரீரங்கத்தில் சேஷசயநம். திருமலைசேஷ

லைசலம். தங்கள் தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவித்தற்காகவே சங்கம் கூடுவது. பிராட்டிஸந்நிதியில் நாம் குழுமியதன் பலன் என்றும் நலனே. முயற்சியே திரு. இதை விடாது அநுஷ்டிப்பவர்கள் ஸ்ரீமான்கள் திருமலை அய்யங்காரும் கேசவய்யங்காரும். தமிழபிவிருத்திக்காக அரும்பாட்டுடன் உழைத்துவரும் ஸ்ரீமான் கேசவய்யங்காரவர்களே இக் கொண்டாடாட்டத்தில் தலைமைதாங்கற்குரியர். அக்ராஸநர்பதவியை அன்புடன் ஏற்குமாறு வேண்டுகின்றேன்.

பண்டித திருவாலி ராமாநுஜாசார் மேற்கண்ட பிரேரணையை ஆமோதித்துப்பேசுகையில் கூறியதாவது:—

நேற்று பங்குனிஉத்திரவிழா திருவல்லிக்கேணியில் நடந்தது. கொடைவாசல் நரஸிம்மாசார்ஸ்வாமி வெகு அழகாக 'கம்பரின் கருத்து' என்ற விஷயத்தைக் கற்றோர் இதயம்களிக்குமாறு உபந்யசித்தார். இராயப்பேட்டை என்பது ராஜ்யப்பேட்டையே. ராஜ்யமாவது இராமராஜ்ஜியமே. எனவே இங்கு எப்பொழுதும் ராமசரிதம் நடந்துகொண்டேயிருத்தல் அத்யாவசியகம். கம்பர்திருநாளையொட்டியே இங்கு இன்று சங்கக்கிளை நிறுவதல் மிகவும் பொருத்தமே. தமிழுக்குக் கதியாவாரிருவர். கவ்கான் கம்பரையும் திவ்கான் திருவள்ளுவரையும் குறிக்குமெனத் திருமணம் செல்வக் கேசவராய முதலியார் மொழிவர். புருஷரால் அர்த்திக்கப்படுவது புருஷார்த்தம். அறம்பொருளின்பம்வீடு. தற்போது உலகில் அர்த்தகாமபரர்களே அதிகம். மேல்நாட்டார் செல்வத்தைப்பெருக்கி ஆத்ம லாபத்தைக் கருதவில்லை. வயிற்றுப்படிப்பு பிரயோசனமில்லை. ஊன்தின்று உடலைப்பெருக்குபவர் உத்தமர்க்கென்சொல்வர். ஆங்கிலக் கல்வியால் நாடு கெடவில்லை என்பதை இங்குள்ள உத்தமாதிகாரிகளாலேயே நன்கு அறியலாம்.

"ஏகம் முதற் கல்வி முளைத்தெழுந்தெண்ணில் கேள்வி
ஆகம்முதற்றிண்பணை போக்கியருந்தவத்தின்
சாகந்தழைத்து அன்பு அரும்பித்தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலுமன்றே"

என்பர் கம்பர். அயோத்தியானது கல்வியென்னும் வுரு முதலானது முளைத்து, மேலெழுந்து பலநூற் கேள்விகளாகிய முதன்மையும்,

வன்மையுமுள்ள அப்பெருங் கவடுகளை மேலோங்க விடுத்து அரிய தவமாகிய இலைகள் தழைத்து, தயையாகிய அரும்புகள் முகைத்து தருமமாகிய மலர்கள் மலர்ந்து, போகமாகிய ஒரு பழமானது பழுத்தது போலுமிருக்கின்றது என்பது இப்பாட்டின் பொருள். அது போல் இங்கு கிளைச்சங்கம் பழுக்கப்போகிறது. கேட்பார் கேசவன் கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பாரோ என்றபடி பகவத்விஷயத்திலீடு பட்டுச் சீர்த்தியுடன் விளங்கும் கேசவய்யங்கார்ஸ்வாமி இச்சபைக்குத் தலைமை வஹிக்குமாறு யானும் வேண்டிக்கொள்கிறேன்.

தலைவர் முன்னுரை.

மிக்க கரகோஷத்திடையே ஸ்ரீமான் கேசவய்யங்காரவர்கள் தலைமைவஹித்து முன்னுரையாகச் சில கூறினர். அதன் சாரம்சமாவது:—

> "உலகம் யாவையுந் தாம்உள வாக்கலும்
> நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
> அலகிலா விளையாட்டுடையார் அவர்
> தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

தமிழ்த்திருநாளே கம்பர் திருநாள். கம்பரென்றால் தமிழ் கூறிமுடிந்தது. பங்குனியுத்தரமான பகற்போதில் சீதாவிவாகம் நடந்ததாகக் கூறுகிறார். திரு என்றால் மங்களம். மான் அணி நோக்கினர் தம் மங்கலக் கழுத்துக்கெல்லாம் தான் அணியாக நின்றாள் சானகி என்பர். வடமொழி பெருமாளது; தென்மொழி பிராட்டியது. அகாரம் அவனைக்குறிக்கும்; உகாரம் இலக்குமிச்சுட்டு. ஆழ்வார் 'உயர்வற உயர்நலம்' என்று உபக்ரமித்தபடி, கம்பரும் 'உலகம் யாவையும்' என்று உகாரத்தில் ஆரம்பிக்கிறார். கல்வியனைத்தும் இங்கேயே பயன் பயக்கவேண்டும். மறுமையிலுள்ளது சுமிலின்பம். பெறுவதெல்லாம் இங்கேயே பெற்று வாழ்வோமாக. ராமாயணப்பயன் நாடியபொருள் கைகூடுதலும் வேரியங்கமலை நோக்குதலுமேயாம். அஞ்சிலே யொன்று பெற்றான் அணங்கைக்கண்டான். இவ்வணங்கே தமிழணங்கு. தமிழ்த்தலைவர் திருக்கண்டேன் என்றதுங்காண்க. வடமொழி முறை தந்தை தாய்; தென்மொழி முறை அன்னை அப்பன். தென்சொற் கடந்தான் வடசொற்கலைக்கெல்லை தேர்ந்தான் என்றதை நோக்குக.

வடமொழிக்கு ஆண்மையில் நோக்கு; தென்மொழிக்கு அருண்மையில் நோக்கு தென்மொழி தேன்மொழியே. கோதாவரிமுதல் கன்னியீருகவுள்ளதே தமிழ்நாடு. வான்மீகியே கம்பராக வந்தார். காளிதாசர், முராரி, பவபூதி இவர்கள் வழுவிய இடங்களைக் கம்பர் வழுவின்றி அமைத்துப் பேசுகின்றார். 'மூங்கையான் பேசலுற்றான் என்ன யான் மொழியலுற்றேன்' என்றதை நன்கு தெளிய வேண்டும். பொருளற்ற மொழிக்குப் பேச்சு என்றுபெயர். வான்மீகியே தன்னுட்புகுந்து ராமாயணம் பாடியதாக கம்பர் கூறுதல் காண்க. கம்பராமாயணத்தை நன்கு நாம் பயிலவேண்டும். இங்கு நிறுவப்பெறும் கிளைச்சங்கத்தில் இடைவிடாது கம்பராமாயணத்தை அறிஞர் வாயிலாகக் கேட்டு மகிழ வேண்டும்

கிளை நிறுவலும் அன்பர் நன்மொழி கூறலும்.

ராவ் சாஹிப் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி ஐயங்காரவர்கள் முதன்முதல் கிளைச்சங்கத்துக்கு ஆசிகூறி பின்வருமாறு பேசினார்:— கேட்டு ஆநந்திக்க வந்தேன். இன்று விழா மிகவும் நன்றாக இருக்கிறது. தமிழிற் பரிசய மில்லாவிடினும் அதனைக் கற்கவும் கேட்கவும் அவாவுண்டு. தமிழ்க்கவி கம்பரே. வடமொழியில் வான்மீகி போல் தென்மொழியில் கம்பர். அவர் சொல்லாததையும் இவர் கூறுகின்றார். எனவே இரு இராமாயணங்களும் அதிகத் தொடர்புடையன. ஒன்று வலது கண், மற்றொன்று இடது கண். இரண்டையும் நன்கு கற்று அநுபவிக்க வேண்டும். கம்பராமாயணத்தை நன்கு பரவச் செய்யவேண்டும். இதில் விசேஷ சிரத்தையுடன் உழைத்து வரும் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தை யான் மிகவும் பாராட்டுகின்றேன்.

பின்னர் ஸ்ரீமான் சே. லக்ஷ்மீ நரஸிம்மாசார் ஸ்வாமி பேசுகையில் தமிழுக்கு அன்பர்கள் சேர்க்கும் சக்தி அதிகம் என்றும், இச் சங்கத்தை அபிவிருத்தி செய்தலே அனைவருடைய கடமை என்றும் கூறினர்.

கிளைச்சங்க நிர்வாகிகள் தேர்தல்.

அடியிற்கண்டபடி கிளைச்சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்:— ஸ்ரீமான் சடகோப நாயக்கர்; உபதலைவர்:— ஸ்ரீமான் வரதராஜ முதலியார்; காரியதரிசி:— ஸ்ரீமான் பார்த்தசாரதி நாயக்கர்; பொக்கிஷதார்:— ஸ்ரீமான் ராஜகோபால முதலியார்; கமிட்டி மெம்பர்கள்:— ஸ்ரீமான்கள் திருவேங்கட செட்டியார், இராமகிருஷ்ண நாயுடு; தங்கவேலு முதலியார்; சுந்திரசேகர நாயக்கர்; ஷண்முக முதலியார்; ஷண்முகம் பிள்ளை; சடகோப முதலியார்.

மாலை யிடல்.

பிராட்டி சாத்திக்கொண்டிருந்த மாலைகள் சபைத்தலைவர் ராமஸ்வாமி அய்யங்கார் கிளைச்சங்கத் தலைவர் இவர்கட்கு வழங்கப் பெற்றன.

உபந்யாசம்.

தாய்ச்சங்கக் காரியதரிசி பின்னர் பேசியதாவது:—

இன்று திருவிழா இங்கு நடந்த சிறப்பை நினைக்கையில் திருவல்லிக்கேணிச்சங்க ஆரம்பதினம் நினைவுக்கு வருகிறது. சிறந்தபக்தையாகிய அடியேனன்னை கோலமிட்டு விளக்கேற்றியாரம்பித்ததே இன்று பிரகாசத்துடன் விளங்குகின்றது. கம்பரின் கவித்திறம் எனும் விஷயத்தைப்பற்றிக் கூறும்படி எனக்கு இட்டகட்டளை. நேரமாகிவிட்டபடியால் மிகச்சுருக்கமாக விண்ணப்பித்துக்கொள்கின்றேன். நாரணன் விளையாட்டெல்லாம் நாரத முனிவன்கூற ஆரணக்கவிதை செய்தான் அறிந்தவான் மீகி என்பான். சீரணிசோழ நாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன் காரணக்கொடையான் கம்பன் தமிழினாற் கவிசெய்தான். கம்பர் வான்மீகியை மிகவும் கொண்டாடுகிறார். அவரது தெய்வமாவிக் கதை மாட்சி தெரிக்கவேதான் ராமாயணம் பாடியதாகக் கூறுகிறார். இவரது இராமாயணம் அரங்கத்தில் பிராட்டி ஸந்நிதி முன்பு மேட்டழகிய சிங்கர் சிறக்கம்பம் செய்ய ஸ்ரீமந் நாத முனிகள் அநுக்ரஹிக்க பங்குனி உத்திரத்தில் அரங்கேற்றப்பட்டது. ஆழ்வாரை விளக்கியவர் கம்பநாட்டாழ்வார். மதுரகவி ஒரு பதிகம் பாடினர். இவர் சதகம் பாடினர். குலசேகரர் பாடியது 105 பாசுரங்கள். அதற்கு நூறு படங்காக இவர் பாடியது 10500. 'அரியணையநுமன் தாங்க' என்ன கம்பீரமான செய்யுள். இராமன் தோள்வலி கூறுவார்க்கு நாடிய பொருள் கைகூடும், ஞானமும், புகழும், வேரியங்கமலை நோக்கும் உண்டாகும், வீடியல் வழியதாக்கும். ராமவென்றிரண்டெழுத்தினால்

நன்மையும் செல்வமும் நாளும் நல்கும் தின்மையும் பாவமுஞ் சிதைந்துதேயும், சென்மமு மரணமுமின்றித் தீரும். கம்பரைப் போற்றுதலாவது அவரிராமாயணத்தையும் சடகோபரந்தாதியை யும் நன்கு பயில்தலேதான்.

தலைவர் முடிவுரை.

சபைத்தலைவர் முடிவுரையாகக் கூறியதாவது :—

இன்று விழா நடக்கையில் ஒரு பூசை நம் ஓரமாக வந்து தாணிமேலேறி இறங்கியது. கம்பர் கதாரம்பத்தில் தன்னைப்பூசை யென உருவகப்படுத்திப் பேசுகிறார். இங்கு வந்ததும் அவர்தான் என யான் கூறுவேன். கம்பரை நாம் உள்ளபடி போற்றவில்லை. அவரது இராமாயணத்தை அனைவரும் நன்கு பயில்தலே அவருக் குச்செய்யும் கைம்மாறு. இக்கிளைச்சங்கம் நன்றாக ஓங்கி வளர வேண்டுமென்பதே பகவானிடத்து யான் செய்யும் பிரார்த்தனை.

வந்தனோபசாரம்.

கிளைச்சங்கத் தலைவர் ஸ்ரீமான் சடகோப நாயக்கர் பின்வரு மாறு வந்தனோபசாரம் அளித்தார்.

“தோட்டருந்திறல் தேனினைத்
தென்னரங்கனைத் திருமாதுவாழ்
வாட்டமில் வனமாலைமார்வனை
வாழ்த்திமால்கொள் சிந்தையராய்
ஆட்டமேவி யலந்தழைத்து
அயர்வெய்தும் மெய்யடியார்கள்தம்
ஈட்டம் கண்டிடக்கூடுமேல்
அதுகாணும்கண் பயனாவதே.”

என்று ஆழ்வார் பணித்தபடி இப்பரம பாகவத கோஷ்டியைச் சேவிக்கப்பெற்ற அடியோங்களுக்கு இன்ன கூறுவதென நாவெழ வில்லை. கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடைய இவ்வவையோ ருக்கு யாம் என்ன செய்யப்போகிறோம். பகவானுக்குப் பல்லாண்டு கூறுவதே தற்போது செய்யக்கூடியது.

கொண்டாட்டம் இரவு 9-15 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

கம்பர் திருநாட் கொண்டாட்டம்.

மூன்றாவது நாள்.

18-3-38உ வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை இராயப்பேட்டை ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள் "கம்பர் ஆழ்வார் துதி" என்ற விஷயம்பற்றி உபந்யாசம் செய்தார். ஆழ்வார் விஷயமாக கம்பர் பாடிய சடகோபரந்தாதி மிகச் சிறப்புற்றதென்றும், அதன் ஸங்க்ரஹமே "தருகைநீண்ட" என்ற பாசுரமென்றும், இது குலசேகரர், மதுரகவி இவர்களைப் பின்பற்றிப் பாடியதென்றும், பகவான் அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹரூபத்தோடு வருவதைக் காட்டுவதற்கு 'இருகைவேழத்திராகவன்' என்கிறாரென்றும், 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்பது ஈற்றடியில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் விளக்கினார்.

நான்காம் நாள்.

19-3-38உ சனிக்கிழமை மாலை 4-மணி முதல் 6-மணிவரை திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் 'ஆழ்வாரும் கம்பரும்' என்ற விஷயம்பற்றி மிகவரியதோர் உபந்யாசம் செய்தார்.

ஐந்தாம் நாள்.

20-3-38உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிமுதல் 6-30 மணி வரை மேற்கண்ட மடத்தில் பண்டித திருவாலி ராமாநுஜாசாரியாரவர்களால் 'கம்பர் உவமைகள்' என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது.

ஆறாம் நாள்.

21-3-38உ திங்கட்கிழமை மாலை 6-30 மணிமுதல் 8-30 மணி வரை சங்கக் காரியாலயத்தில் ஸ்ரீமான் கேசவய்யங்காரவர்களால்

'கம்பர் அணி' என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. 'ஆயிரம் மாமறைக்கும் அலங்காரம்' என்ற ஆழ்வார் அந்தாதிச் செய்யுளுக்கு அபூர்வ விசேஷார்த்தம் சாதித்தார்.

ஏழாம் நாள்.

22-3-38௳ செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிமுதல் 8-30 மணிவரை சங்கக் காரியாலயத்தில் ஸ்ரீமான் திருமலை ஐயங்காரவர்களால் 'கம்பர் ஆற்றுவருணனை' என்ற விஷயம் விரிவாக விளக்கப்பட்டது.

எட்டாம் நாள்.

23-3-38௳ புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியில் மஹோத்ஸவம் ஆரம்பமாக, திருமலை ஐயங்கார் முன்னுரைகூற, ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் 'மாருதிப்பிரபாவன்' எனும் விஷயம் பற்றி மிக அழகை உபந்யாசம் செய்தார், 'அஞ்சிலேயொன்று பெற்றான்' என்ற பாசுரத்தை நன்கு விளக்கி, அதன் உள்ளுறை பொருட்களையும் விசதகமாக எடுத்துரைக்க, திருமலை ஐயங்கார் முடிவுரை கூறும்போது இலக்குவனை ஆசார்ய ஸ்தானத்தில் வைத்து குகன் இராமனை அணுகுவதை விஸ்தரித்து கம்பர் பாடலின் அருமைகளை எடுத்தியம்பினர். சபை இரவு 9-மணிக்கு இனிது நிறைவேறிற்று.

ஒன்பதாம் நாள்.

24-3-38௳ வியாழக்கிழமை இரவு 7-30 மணி முதல் 9-மணிவரை சங்கக்காரியாலயத்தில் ஷை வேதாந்தாசார் ஸ்வாமிகளால் வால்மீகியும் கம்பரும் என்ற விஷயம் பிரசங்கிக்கப்பட்டது.

சாற்றுமறை. (பத்தாம் நாள்)

25-3-38௳ வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார் பிரேரிக்க ராவ்சாஹிப் கமலாபுரம் ராமஸ்வாமி அய்யங்கார் தலைமை வஹித்து முன்னுரைகூற, ஆர். கேசவய்யங்காரவர்கள் 'கம்பர் கவியின்பம்' எனும் விஷயம்பற்றி மிக அற்புதமான ஓர் உபந்யாசம் செய்ய, தலைவர் முடிவுரைகூற, காரியதரிசி வந்தனோபசாரம் வழங்க மஹோத்ஸவம் இரவு 8-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

பொங்கும் மங்களம் எங்குந்தங்குக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

Regd. No. 3712.

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித்தமிழ்ச் சங்கம்.

சங்க வித்வான்கள்.

1. ஸ்ரீ உபவே தில்லையம்பூர் வெங்கடாசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம சடகோபாச்சாரிய ஸ்வாமி (மாம்பலம்).

தலைவர் ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

உப தலைவர்கள்.

1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ராவ்ஸாஹிப் ஆர். இராமஸ்வாமி அய்யங்காரவர்கள்.

காரியதரிசியும், பொக்கிஷதாரரும். ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

கமிட்டி மெம்பர்கள்.

1. ஸ்ரீமான் ஏ. வெங்கடாசாரியரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணையங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, யஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்கள்.
5. ,, யஸ். லக்ஷ்மீ நரஸிம்மாசாரியாரவர்கள்.
6. ,, வி. யன். சிங்காரவேலு முதலியாரவர்கள்.
7. ,, வி. யம். ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
8. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
9. ,, சுந்தரசேகர நாயகரவர்கள்.
10. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.
11. ,, வி. கே. பார்த்தசாரதி ஐயங்காரவர்கள்.

காரியாலயம் ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

முக்கிய நோக்கங்கள்.

1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களை கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்பிரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திரு நாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane and
Published by P. R. Tirumalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St., Triplicane, Madras.